யாரைப் பாதுகாக்க நினைத்தார்களோ அவர்களுக்குத் தண்டனை!

# பொள்ளாச்சி பாலியல் வழக்கில் தலைகுனிந்து நிற்கும் அ.தி.மு.க.வினர்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!



சென்னை, மே 14-

**பொள்ளாச்சி பாலியல் வழக்கில் யாரை பாதுகாக்க வேண்டும் என நினைத்தார்களோ அவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டு இருக்கிறது. ஆகவே அ.தி.மு.க.வினர்தான் தலைகுனிந்து நிற்கிறார்கள் என தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும் - நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான திருமதி கனிமொழி கருணாநிதி அவர்கள் நேற்று (13.05.2025) தூத்துக்குடியில் செய்தியாளர்கள் சந்திப்பில் குறிப்பிட்டார்.**

இது குறித்து கனிமொழி கருணாநிதி அவர்கள் கூறியதாவது:-

பொள்ளாச்சியில் பெண்களுக்கு எதிராக நடந்த வன்முறைகள், பாலியல் கொடுமைகள் அனைத்தும் நம் மனதில் நீங்காத காயமாக உள்ளன. பொள்ளாச்சி பாலியல் வழக்கில் வழங்கப்பட்டுள்ள இன்றைய தீர்ப்பு. அந்த காயத்திற்கு மருந்தாகவும், பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதியாகவும், குற்றவாளிகளுக்குச் சரியான தண்டனையாகவும் உள்ளது.

**பெண்களுக்கு நம்பிக்கை தரும் தீர்ப்பு!**

பாதிக்கப்பட்ட பெண்களின் பெயர்கள் வெளியிடாமல் பாதுகாக்கப்பட்டு உள்ளது. அவர்களுக்கு நிவாரணம் வழங்கவும் உத்தரவிடப்பட்டு உள்ளது. பாதிக்கப்படக் கூடிய அனைத்து பெண்களுக்கும் நம்பிக்கை தரும் வகையில் இந்தத் தீர்ப்பு உள்ளது.

குறிப்பாக, தாங்கள் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டாலோ. தங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் குறித்து வெளியே பேசினால் நிச்சயம் நியாயம் கிடைக்கும் என்ற வகையில் தீர்ப்பு அமைந்துள்ளது.

**அ.தி.மு.க. ஆட்சியில் வழக்கை விசாரிக்க முடியாத நிலை!**

பொள்ளாச்சி பாலியல் சம்பவத்தில் நடந்த குற்றத்தை விசாரிக்க முடியாத நிலைதான் அன்றைய அ.தி.மு.க. ஆட்சியில் இருந்தது. குற்றவாளிகளைப் பாதுகாப்பதில் மட்டுமே அவர்கள் கவனம் இருந்தது. குற்றம் சாட்டப்பட்டவர்களில் பலர் அ.தி.மு.க.வினராக இருப்பதால் பாதுகாக்கும் வேலையில் ஈடுபட்டனர்.

தி.மு.க.வும் மற்ற எதிர்க்கட்சிகளும் ஊடகங்களும் நீதிக்காகப் போராடின. இதற்கடுத்தே, இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்ய முன்வந்தார்கள். இந்த விவகாரம் தொடர்பாக அன்றைக்கு தி.மு.க. மகளிரணி சார்பில் போராட்டம் அறிவிக்கப்பட்டது.

அப்போது போராட்டம் நடக்கும் இடத்திற்கு நான் செல்லக்கூட அனுமதிக்கவில்லை. பின்பு அனுமதிக்காக ஒரு நாள் போராட்டத்தை நடத்த வேண்டியிருந்தது. அந்த அளவுக்கு குற்றவாளிகளைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தினார்கள்.

**தி.மு.க. வற்புறுத்தலால் வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டது!**

அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நமது முதலமைச்சர் அனைத்து தரப்பிலும் வலியுறுத்திய காரணத்தினால்தான். பின்னர் பொள்ளாச்சி வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டது. நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்பு இதில் நியாயம் கிடைக்கும் என முதலமைச்சர் அவர்கள் அப்போது உறுதி அளித்து இருந்தார்கள். அந்த வாக்குறுதி, இன்று நிறைவேற்றிய நாளாக பார்க்கிறேன்.

தி.மு.க. ஆட்சியின் மீது இன்று மக்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. குற்றம் நடக்கும் பட்சத்தில் யாராக இருந்தாலும், எந்தக் கட்சியாக இருந்தாலும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே முதல்வரது ஆணை.

**நியாயம் கிடைக்க உறுதியாக இருக்கும் முதல்வர்!**

தமிழ்நாட்டில் குற்றங்கள் நடைபெறக்கூடாது என்பதில் திராவிட மாடல் ஆட்சி உறுதியாக இருக்கிறது. ஒருவேளை சில குற்றங்கள் நடைபெற்று விட்டால், பாதிக்கக் கூடியவருக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பதில் முதலமைச்சர் மிகவும் உறுதியாக இருக்கிறார்.

யாரை பாதுகாக்க வேண்டும் என நினைத்தார்களோ அவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டு இருக்கிறது. ஆகவே அ.தி.மு.க. வினர்தான் தலைகுனிந்து நிற்கிறார்கள். அ.தி.மு.க. கூட்டணியில் இருக்கும் பா.ஜ.க. ஆளும் நிலையில், இன்றைக்குத் தமிழ்நாடு பெண்களுக்கு பாதுகாப்பான மாநிலமாக விளங்குகிறது என்பதை தேசிய குற்ற ஆவண காப்பகம் சார்பில் வெளியிட்டு இருக்கிறார்கள்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி அவர்கள் தெரிவித்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (13.05.2025) பெருநகர சென்னை மாநகராட்சி இராயபுரம் மண்டல அலுவலகத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மேயர் ஆர். பிரியா, சி.எம்.டி.ஏ. முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, எம்.இசட்.ஆசாத் எம்.சி., தாஹா நவீன், பரிமளம், ராஜேஷ் ஜெயின், சிஎம்டிஏ தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, தலைமை பொறியாளர் ப.மகாவிஷ்ணு, மண்டல அலுவலர் டாக்டர் பரிதா பானு மாநகராட்சி, மின்சாரத்துறை, தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், குடிநீர் வடிகால் வாரியம் சேர்ந்த அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

நெல்லை, மே.14-

திராவிட மாடல் முதலமைச்சர், நம் நெஞ்சம் நிறைந்த கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதல்வர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் கூட்டம் இன்று (14ஆம் தேதி புதன்கிழமை) காலை 10 மணி அளவில் வண்ணார்பேட்டை ஆப்பிள் ட்ரீ கூட்ட அரங்கில் மாவட்ட அவைத் தலைவர் வி.கே.முருகன் தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார்.

என நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு. அப்துல்வகாப் எம். எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது.

நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என். நேரு அவர்களின் ஆலோசனையின் படி நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க நிர்வாகி கள் கூட்டம் இன்று (14.05.2025- புதன்கிழமை) காலை 10 மணிக்கு, வண்ணாரப்பேட்டை ஹோட்டல் ஆப்பிள் ட்ரீ கூட்ட அரங்கில், நெல்லை மத்திய மாவட்ட அவைத்தலைவர் வி.கே.முருகன் தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் கழக துணை பொதுச்செயலாளர், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்கள்.

நிகழ்வில் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 03.05.2025 அன்று நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் சம்பந்தமாக. கழக வளர்ச்சிப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ.அன்பரசன் - க.ஒப்பிலாமணி - மா.பூபதி சிறப்புரை!

# பல்லாவரம் வடக்கு பகுதியில் கழக அரசின் சாதனைகளை விளக்கி மாபெரும் பொதுக்கூட்டம் !

## இ.கருணாநிதி எம்.எல்.ஏ., - எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ பங்கேற்பு! இ.ஜோசப் அண்ணாதுரை தலைமை!

பல்லாவரம், மே.14-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பல்லாவரம் வடக்கு பகுதி திமுக சார்பாக கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கழக அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கி மாபெரும் பொதுக் கூட்டம் இன்று (14.5.2025 - புதன்கிழமை) மாலை 6:00 ஜமீன் பல்லாவரம் 17 வது வார்டு லத்திப் காலனி பகுதியில் கூட்டம் நடைபெறுகிறது.

பல்லாவரம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை தலைமை வகிக்கிறார்.

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ. ஜானகிராமன், வட்டக் கழகச் செயலாளர் டி.எச். பிரான்சிஸ் ஃபால் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகிறார்கள்.

பகுதி கழக நிர்வாகிகள் ச.சிவக்குமார், இரா.சேகர், வ.முத்து, பி.அம்பிகா, எஸ். நெடுஞ்செழியன், ஜி.கருணாமூர்த்தி, எம்.இளங்கோ, மீசை கே.ராதா, ஐ.கஜேந்திரன், சே. கன்னியப்பன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழக நாடாளுமன்ற மக்களவை குழு தலைவர் டி.ஆர்.பாலு, மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., ஆலந்தூர் க.ஒப்பிலாமணி, மா. பூபதி ஆகியோர் சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

மேலும் இக்கூட்டத்தில் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ. காமராஜ், அ.தமிழ் மாறன், என்.நவீன், மு.ரஞ்சன், கோல்ட் டி.பிரகாஷ், குளத்துமேடு மூ.நாகலிங்கம், க.ரமேஷ், த.ராஜாராமன், கே.தனசேகரன், வெ. தாமோதரன், மா. சந்திரசேகரன், எம்.ஏ.டி.எஸ். விஜய், பா.ராஜா, பி.கே.ஏ. சத்திய பிரபு, ஜெ.இன்ஷாமாம், என்.எஸ்.மதனகோபால், வீடியோ பி.ஹரி, ஜூலியன் அதிசயராஜ், எஸ்.ஹரி, சரத் வெங்கடேசன், எல்.டில்லி பாபு, எஸ். சாகுல் ஹமீது, ஜே.பிரசன்னா, எம்.இளவரசன், எல்.ஆர். சதீஷ்குமார், எம். பிரகாஷ், ஆர்.மணிமேகலை, ஒய்.பத்ர்நிஷா, எம். கே.கல்யாணி, ஆர்.கோமதி, பி.லதா, வி.ஆதிலட்சுமி, டி.லட்சுமி,

பல்லாவரம் தெற்கு பகுதி கழக நிர்வாகிகள் வை.தா.ர.மூர்த்தி, வி.கர்னல், வெங்கடேசன், பி.மீனா, ஆர். செந்தில்குமார், ஆ.ராமச்சந்திரராஜா, டி. பார்த்திபன், ராமகிருஷ்ணன், ஜே.சுரேஷ் குமார், செம்பாக்கம் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள் ஏ. வீரபத்திரன், கே.பூபதி, எச். பாஸ்கர், சரஸ்வதி சந்திரசேகர், டி.கார்த்திக், ஜி.ஜெகநாதன், ம.பர்குணன், ஓ.தண்டபாணி, சி.ஆர்.மதுரை வீரன், பா.பாலச்சந்தர், பல்லாவரம் வடக்கு பகுதி செயலாளர் மாமன்ற உறுப்பினர்கள் தே.இளங்கோவன், பி.பரமசிவம், டி.ராஜ்குமார், டி.வி. ராஜா எம்.சி., எம்.அந்தோணி, தமிழ் கோ.ரங்கநாதன், லதா சிவகுமார், ரேணுகா தேவி பரமசிவம், மங்கையர் திலகம் ராஜ்குமார், பிரேமலதா பண்டேரிநாதன்,

மற்றும் பல்லாவரம் தெற்கு பகுதி வட்டக் கழகச் செயலாளர், மாமன்ற உறுப்பினர்கள், நிர்வாகிகள், செம்பாக்கம் வடக்கு பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், பாக முகவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

வட்டக் கழகச் செயலாளர் மை.அந்தோணி நன்றி கூறுகிறார்.

ரூ.586.94 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள

# 5,180 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் விரைவில் திறக்கப்படவுள்ளன!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்!

சென்னை, மே.14-

குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் நேற்று (13.5.2025) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்டப்பகுதிகளான கைலாசபுரம், மீனவர் குடியிருப்பு, செட்டித் தோட்டம், மற்றும் மீனாம்பாள் சிவராஜ் நகர் ஆகிய திட்டப்பகுதிகளின் கட்டுமான பணிகளை ஆய்வு செய்தார்.

அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் சென்னையில் கைலாசபுரம் திட்டப்பகுதியில் ரூ. 63.34 கோடி செலவில் கட்டிமுடிக்கப்பட்டுள்ள 392 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளையும், மீனவர் குடியிருப்பு திட்டப்பகுதியில் ரூ. 75.22 கோடி செலவில் கட்டப்பட்டு வரும் 520 அடுக்குமாடி குடியிருப்புகளும், செட்டித் தோட்டம் திட்டப்பகுதியில் ரூ.45.36 கோடி செலவில் கட்டப்பட்டு வரும் 243 அடுக்குமாடி குடியிருப்புகள், மீனாம்பாள் சிவராஜ் நகர் திட்டப்பகுதியில் ரூ. 46.72 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 308 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை ஆய்வு மேற்கொண்டார்.

குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் பின்னர் பேசுகையில்

“தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பாக 13 திட்டப்பகுதிகளில் ரூ.586.94 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 5180 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் விரைவில் திறக்கப்படவுள்ளது. திறந்து வைக்கப்படவுள்ள குடியிருப்புகளில் பொது மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர், மின் இணைப்பு, தண்ணீர் தொட்டிகள், சாலை வசதிகள் என அனைத்தும் முடிக்கப்பட வேண்டும், அவற்றை அதிகாரிகள் ஆய்வு செய்து உறுதி செய்ய வேண்டும். முதல்வர் அவர்கள் திறந்து வைத்தவுடன் உடனுக்குடன் வீடுகள் ஏழை மக்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும். மாற்றுத் திறனாளிகள், வயது முதிர்ந்த பெரியோர்கள், உடன் நிலை பாதிக்கப்பட்டோருக்கு முதல், இரண்டு மடிகளை ஒதுக்க வேண்டும்.

வாரியத்தால் 15 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டு பழுதடைந்த குடியிருப்புகளை புனரமைக்கும் திட்டத்தின் கீழ், ரூ.152.57 கோடி மதிப்பில் 51 ஆயிரம் குடியிருப்புகள் புனரமைக்கும் பணிகள் துவங்க ப்பட்டு, இதுவரை 30,387 குடியிருப்புகள் பழுது பார்த்து, புனரமைப்பு செய்து, புதுப் பொலிவு பெற்றுள்ளன. 20,613 குடியிருப்புகளில் பணிகள் மேற்கொள்ளபட்டுவருகிறது. நடப்பாண்டு 2025-2026 ல் ரூ. 280 கோடி மதிப்பீட்டில் 137 திட்டப்பகுதி களில் உள்ள 76,549 குடியிருப்புகள் பழுது நீக்கி, புனரமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அனைவருக்கும் வீடு திட்டத்தில், 2014- 2021 வரை 6 ஆண்டு காலத்தில் ரூ. 2,438 கோடி மதிப்பில் 27, 668 குடியிருப்புகள் மட்டுமே கட்டப்பட்டது. 4 ஆண்டு கழக ஆட்சியில் ரூ. 5 ,343.16 கோடி மதிப்பில். 46, 929 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்பட்டுள்ளது. கடந்த ஆட்சியில், 6,417 குடியிருப்புகள் மட்டுமே வழங்கப்பட்ட நிலையில், கழக ஆட்சியில் 4 ஆண்டுகளில் 56,299 அடுக்குமாடி குடியிருப்புகள் ஏழை, எளிய மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் அன்சுல் மிஸ்ரா, வாரிய இணை மேலாண்மை இயக்குநர் டாக்டர் க.விஜய கார்த்திகேயன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி. சேகர், ஜே.ஜே எபினேசர், ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, வாரிய தலைமை பொறியாளர் வி.எஸ்.கிருஷ்ணசாமி, மேற்பார்வை பொறியாளர் (பொ) இளம்பரிதி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நகரச் செயலாளர் மறைமலைநகர் ஜெ.சண்முகம் தலைமையில்

# மறைமலைநகர் வடக்கு நகர தி.மு.க. சார்பில் கழக அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் - ஆலந்தூர் மலர்மன்னன் - ரூ.கீர்த்தனா சிறப்புரை!

காஞ்சிபுரம், மே. 14

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், மறைமலைநகர் வடக்கு நகர தி.மு.க. சார்பில் நாடு “போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு” கழக அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் இன்று (14.05.2025 புதன்கிழமை) மாலை 6.30 மணிக்கு, 10 வது வார்டு, களிவந்துபட்டு, மறைமலைநகரில் நடைபெறுகிறது.

மறைமலைநகர் வடக்கு நகரச் செயலாளர் ஜெ.சண்முகம் தலைமை வகிக்கிறார்.

10வது வார்டுச் செயலாளர் அ.சங்கர் (எ) கருணாகரன் வரவேற்புரை ஆற்றுகிறார்.




நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி காஞ்சிபுரம் மாநகரம், பகுதி கழகம் 1 சார்பில் கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன் தலைமையில், பகுதி செயலாளர் கே.திலகர் ஏற்பாட்டில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., கவிஞர் அ.சல்மா கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம், சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், மேயர். திருமதி.மகாலட்சுமி யுவராஜ், மாமன்ற உறுப்பினர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சு.சுப்பிரமணி, ர.சீனிவாசன், தேவி கோகுலகிருஷ்ணன், வே.வெங்கட், மு.கண்ணன், வி.ஸ்ரீராம், எம்.முத்து, ஆர்.மருதீஸ்வரன், க.செல்வகுமார், வழக்கறிஞர் சிவக்குமார், சிவ.பரணி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பொதுக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமை கழக பேச்சாளர்கள் ஆலந்தூர் மலர் மன்னன், ரூ.கீர்த்தனா, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், மாவட்ட துணைச் செயலாளர் வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ, செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் பிரபு கஜேந்திரன் ஆகியோர் கழக அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இதில் டி.மூர்த்தி, த. வினோத்குமார், எம்.கே.டி. கார்த்திக், பி.சந்தானம், கே.பி. ராஜன், எம்.டி.லோகநாதன், சித்ரா கமலக்கண்ணன், எஸ். ஆல்பர்ட், செ.முருகேசன், ப. பார்த்தசாரதி, த.மகேந்திரன், பி.ராஜேந்திரன், பா.மணிமாறன், அரங்ககிரிச்சந்திரன், இரா.அசோகன், பி.கருணாநிதி, வெ.சுந்தர் மற்றும் வார்டுச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.கே.கமலகண்ணன் நன்றி கூறுகிறார்.

# திருவம்பட்டி ஊராட்சியில் தொழிலாளர் நலவாரியத்தில் உறுப்பினர்கள் சேர்க்கும் முகாம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

செஞ்சி, மே 14-

விழுப்புரம் மாவட்ட தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை சார்பில் தமிழ்நாடு கட்டுமானம் மற்றும் உடல் உழைப்பு அமைப்பு சாரா தொழிலாளர்கள் நல வாரியத்தில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் சிறப்பு முகாம் வல்லம் ஒன்றியம் திருவம்பட்டு ஊராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர்கள் நலன் மற்றும் சமூக பாதுகாப்பு நல வாரிய உறுப்பினர் செஞ்சி சிவா தலைமை தாங்கினார்.

ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் முன்னிலை வகித்தார். விழுப்பு ரம் மாவட்ட தொழிலாளர் மற்றும் சமூக பாதுகாப்பு திட்ட உதவி ஆணையர் ராஜசேகரன் அனைவரையும் வரவேற்றார்

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தா லந்து கொண்டு முகாமை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

தொடர்ந்து திருவம்பட்டு, கப்பை ஆகிய ஊராட்சிகளில் நடைபெற்ற தமிழ்நாடு கட்டுமானம் மற்றும் உடல் உழைப்பு அமைப்பு சாரா தொழிலாளர்கள் நல வாரிய சிறப்பு முகாமில் உறுப்பினர் பதிவு செய்தல், உறுப்பினர் பதிவு புதுப்பித்தல், உதவித்தொகை, ஓய்வூதியம் ஆகிய திட்டங்களுக்கு ஏராளமானோர் கலந்து கொண்டு பதிவு செய்தனர்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் துரை, இளம்வழுதி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உதயகுமார், இளங்கோவன், மாவட்ட கவுன்சிலர் சசிகலா மோகனசுந்தரம், ஊராட்சி மன்ற தலைவர் முருகன், ஒன்றிய நிர்வாகி கள்கம்மந்தூர் கண்ணன், கொங்கரப்பட்டு கண்ணன், முருகன், திருவம்பட்டு கிளைக் கழக நிர்வாகிகள் நாராயணசாமி, ராஜேந்திரன், பன்னீர் ,தனுசு, சத்யராஜ் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில், நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது நூறாண்டு, திராவிட மாடல் அரசின் நான்காம் ஆண்டு சாதனைகள் விளக்க பொதுக்கூட்டம் 19வது வட்டம் மாத்தூர் முதல் பிரதான சாலையில், மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்எல்ஏ தலைமையில் நடைபெற்றது. கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் ஆரணி வெ.அன்புவாணன் சிறப்புரையாற்றினார். பகுதி கழகத்தின் சார்பாக ஆயிரம் மகளிருக்கு சேலைகளும், மூன்று பேருக்கு தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டது. வட்ட செயலாளர்கள் மாத்தூர் கா.தாமரைச்செல்வன், இ.கண்ணப்பன், கே.கருணாகரன் ஆகியோர் வரவேற்றனர். மிசா.மதிவாணன், டி. ராமகிருஷ்ணன், வி. திராவிட வீரன், கவுன்சிலர்கள் க. காசிநாதன், ஆ. ராஜேந்திரன், நந்தினி சண்முகம், மஞ்சம்பாக்கம் ஆர். பாபு,வி. கார்த்திகேயன், பா. சந்திரன், ஜிம் கே. ராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள். பி. நிர்மல் குமார் நன்றி கூறினார்.